

கழக பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி. ஆர். பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி, சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்திற்கு கலாநிதி வீரா சாமி எம்.பி., தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி., ரொக்கையா மாலிக் (எ) சல்மா எம்.பி., ஆகியோர் நேரில் சென்று அன்னாரின் உருவப்படத் திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார்.



காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் ஏற்பாட்டில், செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம்.அண்ணாமலை அறக்கட்டளை சார்பில் காஞ்சிபுரத்தில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் சிறப்பாக நடைபெற்றது! கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் . ஆர். காந்தி பணி ஆணைகளை வழங்கினார்! க. செல்வம், எம்.பி., தொடங்கி வைத்தார்! மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், சன்பிராண்ட் கே. ஆறுமுகம், பி.எம்.குமார், எம்.எஸ்.சுகுமார், கே. திலகர், எஸ். சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், படுநெல்லி பி.எம்.பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ், காஞ்சிபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் திருமதி மலர்கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக்குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், மாவட்ட ஊராட்சிகுழு துணைத் தலைவர் திருமதி நித்யா சுகுமார், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, ஒன்றியக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் வேலைவாய்ப்பு முகாமினை துவக்கி வைத்தார்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சியில்

# கேழ்வரகு உற்பத்தித் திறனில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம்!

## 17 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள் பயனடையும் வகையில் பயிர்க்கடன்கள்!

சென்னை, ஆக.25-

முதலமைச்சர் .மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் கேழ்வரகு உற்பத்தித் திறனில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் என்றும் கடந்த ஆண்டில் ரூபாய் 15 ஆயிரத்து 62 கோடி பயிர்க் கடன்கள் 17 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகள் பயன்! இந்த ஆண்டில் ரூபாய் 17 ஆயிரம் கோடி பயிர்க் கடன்கள் ரூ. 3000 கோடி கால்நடை வளர்ப்புக் கடன்கள் வழங்கப்படுகிறது என்றும் இணையம் வழி வி ண்ணப்பித்த ஒரே நாளில் பயிர்க்கடன்கள் கிடைக்கும் என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு திட்டம் இல்லை என்று சொல்லும்அளவுக்கு முன்மாதிரியான ஒரு திட்டத்தைத் தற்போது தொடங்கி வைத்துள்ளார்கள். வேளாண் பெருமக்கள் இணையவழியில் விண்ணப்பித்த அன்றே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்கடன் சங்கங்கள் மூலம் பயிர்க்கடன் வழங்கும் திட்டம் தான் அது!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 17.8.2025 அன்று தருமபுரியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் வேளாண்துறை சார்பில் அமைக்கப்பெற்றிருந்த சிறப்பான கண்காட்சி அரங்குகளையும் விவ சாயக்கருவிகளையும் பார்வை யிட்டு மகிழ்ந்தார்கள். அதிகாரிகளை யும், விவசாயிகளையும் பாராட்டி னார்கள். அன்றைய விழாவில் இணையவழியில் விவசாயி களுக்குப் பயிர்க்கடன் வழங்கும் சீரிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

பயிர்க்கடன்களைப் பெறுவதற் காகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களுக்கு இனி விவசாயிகள் நேரில் செல்லத் தேவையில்லை. இணையவழி யில் விண்ணப்பிக்கலாம், விண்ணப்பித்த பின் கடன் தொகைக்காக இனி ஒரு வாரகாலம் விவசாயிகள் காத்திருக்கவும் தேவை யில்லை. கடன் கோரி இணையத்தில் விண்ணப்பித்த அன்றைய தினமே அவர்களுக்குக் கடன் கிடைத்துவிடும். விவசாயி களுக்குப் பெரும்பயன் தரும் இத்திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தருமபுரி விழாவில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

**கடன்கோரி விண்ணப்பிப்பதில் எளிய நடைமுறை**

இத்திட்டத்தில் விவசாயி ஒருவர் விண்ணப்பிக்கும் முறையும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. வேளாண் பெருமக்கள் அருகில் உள்ள இசேவைமையத்துக்குச் சென்று விண்ணப்பிக்க லாம். தங்களது கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர் எண் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சேமிப்புக்கணக்கு எண் இரண்டில் ஒன்றை மட்டும் கொடுத்தால் போதும். இந்த விண்ணப்பம் வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை ஆகிய இரு துறைகளிலும் சரி பார்க்கப்பட்டு அன்றைய தினமே கடன் தொகையானது வேளாண் பெருமக்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இத்திட்ட த்தில் ஒரு விவசாயிக்கு அதிகபட்ச மாக 5 லட்சம் ரூபாய் வரை பயிர்க்கடன் வழங்கப்படு கிறது.

தர்மபுரியில் தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டமானது அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அன்றைய விழாவில் அறிவித்தார்கள். அதை விட, பயிர்க்கடன் பெறுவதற்கு எளிமையான முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதைப் போலவே, சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்கும் நடைமுறையும், சிறு குறு கடன்களுக்கான நடை முறை யும் எளிமைப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

**விண்ணப்பித்த ஒரே நாளில் விவசாயக் கடன்**

தமிழ்நாட்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நெல், கரும்பு, பருத்தி, நிலக்கடலை, மக்காச் சோளம் ஆகியவற்றைப் பயிரிட பயிர்க் கடன்கள் வழங்கப்படுகின்றன. நாட்டில் கடன் வழங்கும் திட்டங்கள் ஏராளமாக உள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் அதிகபட்ச மாக மூன்று இலட்சம் ரூபாய் வரை கடன் பெற்று, அதனை ஓர் ஆண்டுக்குள் திருப்பிச் செலுத்தி விட்டால் வட்டி செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்ற நடை முறையும் இருக்கிறது. ஆனால், உடனடியாகக் கடன் வழங்கும் திட்டம் என்பது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிடமாடல் ஆட்சியில் தான் தற்போது தொடங்கப் பட்டுள்ளது. அதுவும், ஒரே நாளில் கடன் வழங்கும் திட்டமாக இதனை முதலமைச்சர் அவர்கள் வடிவமைத்துள்ளார்கள்.

**வேளாண் பெருமக்கள் கவலையைப் போக்கியுள்ள திராவிட நாயகர்!**

இதுவரை பயிர்க்கடன்கள் பெறு வதற்கு பட்டா, சிட்டா, அடங்கல், கிராம நிர்வாக அலுவலர் சான்று, குடும்ப அட்டை ஆகிய வற்றை விண்ணப்ப த்துடன் இணைத்து வழங்க வேண்டும். இதனை வாங்கி விண்ணப்பிப்ப தற்குத் தாமதம் ஆகிவிடுகிறது; கடன்பெற மேலும் தாமதம் ஆகி விடுகிறது என்று வேளாண் பெரு மக்கள் கவலையுடன் கூறி வந்தார்கள். வேளாண் பெரு மக்கள் கவலை யைப் போக்கி இருக்கிறார்கள் திராவிட நாயகர் அவர்கள்.

**உயர்த்தப்பட்டுள்ள கடன்கள்:**

கடந்த ஆண்டில் 15 ஆயிரத்து 62 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனை 17.37 இலட்சம் விவசாயிகள் பெற்று பயன் அடைந்தார்கள். 4.43 இலட்சம் பேருக்கு 2 ஆயிரத்து 645 கோடி ரூபாய் கால்நடைவளர்ப்புப் பிரிவின் கீழ்கடன்கள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு ரூ.17 ஆயிரம் கோடி வரை பயிர்க்கடன் வழங்கப்படும் என்றும்; 3 ஆயிரம் கோடி ரூபாய் கால்நடை பிரிவின் கீழ் கடன் வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

**கேழ்வரகு உற்பத்தித் திறனில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம்**

திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு விவசாயச்சாகு படி பாசனப்பரப்பும் அதிகரித்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் 457.08 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 20202021 ஆம் ஆண்டில் எக்டருக்கு 2,835 கிலோவாக இருந்த உணவு தானியப்பயிர்களின் உற்பத்தித்திறன் 2023 24 ஆம் ஆண்டில் 2,904 கிலோவாக அதிகரித்துள்ளது. கேழ்வரகு உற்பத்தித்திறனில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம். மக்காச்சோளம், மொத்த எண்ணெய் வித்துகள் மற்றும் கரும்பு உற்பத்தித்திறனில் இரண்டாம்இடம், குறுதானியங்கள் மற்றும் நிலக்கடலை உற்பத்தித்திறனில் மூன்றாம் இடம் என்ற அளவில் அகில இந்திய அளவில் உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.

இப்படி, முதலமைச்சர் மு.க. ஸ்டா லின் அவர்கள் பயிர்க்கடன்கள் வழங்கும் நடைமுறையில் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தி பயிர்க்கடன் தொகையையும் உயர்த்தி வழங்கி விவசாயப் பெருமக்களின் உள்ளங்களைக் குளிரச் செய்துள்ளார்கள். பல மாநி லங்களில் விவசாயிகள் போராடி வரும் சூழ்நிலையில் போராட வேண்டிய அவசியமே இல்லாத வாறு விவசாயிகளுக்குத் தேவை யான சலுகைகளை வழங்கி, அவர் களை மகிழ வைத்து விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் திராவிட மாடல் அரசுக்கு இணை இந்தியாவில் எங்கும் இல்லை.

இவ்வாறு தமிழ்நாடு அரசு .வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.




### வாக்குப்பதிவு குறித்த நம்பகத் தன்மையை

# மக்கள் மன்றத்திற்கு தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும்!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.25-

வாக்குப் பதிவு நம்பகத் தன்மையை மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமின்றி மக்கள் மன்றத்திற்கும் தேர்தல் ஆணை யம் தெளிவு படுத்த வேண்டும் என்று ‘தினகரன்’ நாளேடு தலை யங்கத்தில் வலியுறுத்தி யுள்ளது.



தினகரன்

ஆகஸ்ட் 24, 2025 ஞாயிற்றுக்கிழமை

பேரணியில் ஓரணி

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்திய நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடக்கிறது. இதில் வாக்காளர்கள் ஜனநாயக கடமையை செலுத்தி, தங்களுக்கான மக்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்கின்றனர். அவர்கள் மக்களின் குரலாக நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் ஒலித்து வருகின்றனர். இந்தியாவில் ஆரம்பகட்ட தேர்தல்கள் என்பது, வேட்பாளர்களுக்கான சின்னங்களில் முத்திரையிட்டு வாக்கை பதிவு செய்யும் வகையில் இருந்தது. இப்படிப்பட்ட நிலையில், அறிவியலின் வளர்ச்சியால் 2004ம் ஆண்டு பொதுத்தேர்தலில், முதல்முறையாக மின்

இது குறித்து 24.08.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலை யங்கத்தில் கூறியிருப்பதாவது:-

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்திய நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடக்கிறது. இதில் வாக்காளர்கள் ஜனநாயக கடமையை செலுத்தி, தங்களுக்கான மக்கள் பிரதிநிதிகளை தேர்வு செய்கின்றனர். அவர்கள் மக்களின் குரலாக நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் ஒலித்து வருகின்றனர். இந்தியாவில் ஆரம்ப கட்ட தேர்தல்கள் என்பது, வேட்பாளர்களுக்கான சின்னங்களில் முத்திரையிட்டு வாக்கை பதிவு செய்யும் வகையில் இருந்தது. இப்படிப்பட்ட நிலையில், அறிவியலின் வளர்ச்சியால் 2004ம் ஆண்டு பொதுத்தேர்தலில், முதல்முறையாக மின்னணு வாக்குப்பதிவு முறை அமலுக்கு வந்தது. அன்றிலிருந்து 20ஆண்டுகளாக, இந்த முறையில்தான் வாக்குப்பதிவு நடந்து வருகிறது. ஒவ்வொரு தேர்தலிலும் மின்னணு வாக்கு இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து எதிர்க்கட்சிகளும், நடுநிலையாளர்களும் பல்வேறு கேள்விகளை முன்வைத்து வருகின்றனர். இதற்கு 100சதவீதம் தெளிவான தீர்வு என்பது, இதுவரை கிடைக்காத ஒன்றாகவே உள்ளது.

இப்படிப்பட்ட நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவ ருமான ராகுல்காந்தி, ‘வாக்குத்திருட்டு’ என்ற பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார். பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதும், பெங்களூரு உள்ளிட்ட இடங்களில் போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டதும் அவரது குற்றச்சாட்டில் பிரதானமாக இருந்தது. மேலும், இதற்கான ஆதாரங்களையும் அவர், மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்தார். போலி வாக்காளர்கள், போலி முகவரி, ஒரே முகவரியில் அதிக வாக்காளர்கள், தவறான புகைப்படங்கள் படிவம் 6ஐ தவறாக பயன்படுத்துதல் உள்ளிட்ட 5வழிகளில் இந்த வாக்கு திருட்டு நடந்துள்ளது. ஒன்றியத்தை ஆளும் பா.ஜ. அரசும், தேர்தல் ஆணையமும் கூட்டு வைத்து வாக்குத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர் என்ற அவரது தெளிவான குற்றச்சாட்டு, இது நாடு முழுவதும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி உள்ளது.

ஆனால் ஒன்றிய அரசும், தேர்தல் ஆணையமும் இது வரை இதற்குரிய தெளிவான விளக்கத்தை தரவில்லை என்பது ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளின் குமுறலாக மாறியுள்ளது. இந்த நிலையில் ‘வாக்காளர் உரிமை யாத்திரை’ என்ற பெயரில், புதிய முன்னெடுப்பை கையில் எடுத்துள்ளார் ராகுல் காந்தி. பீகாரின் சசாரம் என்ற இடத்தில் தொடங்கி, ஆரம்பமான இந்த பயணத்தில் மக்கள் வெள்ளமும் அலையென திரண்டு வருகிறது. இந்த எழுச்சியை மேம்படுத்தும் வகையில், பீகாரில் தொடர் பேரணி ஒன்றை நடத்துகிறார் ராகுல் காந்தி.

வரும் 27ம்தேதி நடக்கும் இந்த பேரணியில் தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின் பங்கேற்கிறார். இதேபோல் ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த்சோரன், தெலங் கானா முதல்வர் ரேவந்த்ரெட்டி, இமாசல பிரதேச முதல்வர் சுக்விந்தர்சுகு, கர்நாடக முதல்வர் சித்த ராமையா ஆகியோர் பங்கேற்கின்றனர். மேலும், எதிர்க்கட்சிகளை சேர்ந்த பல்வேறு தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று ஏராளமானோர் திரளாக பங்கேற்க முடிவு செய்துள்ளனர். ஆனால், இதற்கு ஒன்றிய அரசும், தேர்தல் ஆணையமும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதையே அவர்களின் மெத்தனப்போக்கு காட்டுகிறது.

“ஆளுங்கட்சி மட்டுமன்றி, எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் தேர்வு செய்து பணியாற்ற அனுப்பி வைக்கும் எஜமானர்கள் மக்கள் தான். அவர்களின் பிரதிநிதிக ளாகவே இந்த பேரணியை நடத்துகின்றனர் எதிர்க்கட்சிகள். இதன்படி பேரணியில் ஓரணியாக மக்களும் உள்ளனர். எனவே வாக்குப்பதிவு குறித்த நம்பகத்தன்மையை மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமின்றி மக்கள் மன்றத்திற்கும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும் என்கின்றனர் நடுநிலையாளர்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி எல்லாபுரம் ஒன்றியம் பூச்சி அத்திப்பேடு ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து மக்களின் கோரிக்கை மனுக்களை பதிவு செய்யும் செயல்முறை நேரில் பார்வையிட்டு மனுதார்களுடன் நேரடியாக உரையாடி துறை சார்ந்த அதிகாரிகளுடன் இணைந்து அவர்களின் தேவைகளுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு முன்னாள் மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். உடன் ஆ.சத்தியவேலு, எஸ்.ரமேஷ், கா.சு.ஜெகதீசன், தங்கம்முரளி, இரா. அறிவழகன், க.சு.தமிழ்உதயன், எம்.கேசவன், கே.வி.நாகராஜ், பி.கே.நாராயணசாமி, குப்பன், அஜீத், மனோஜ், சந்திரபாபு, முரளி, செல்வகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 186 வது நாள்!

## அம்பத்தூர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

*சென்னை,அக.25-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்பு மிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 186 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (24.08.2025), அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 80, தாங்கள் பூங்கா புதூர் மெயின் ரோடு, விஜயலட்சுமிபுரம், 2) வட்டம் 81, அம் பத்தூர் OT பஸ் நிலையம், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்க*





*ளையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமா ட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ். பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், பி. கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. வட்டச் செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா (எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில்.*

*ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*



சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகரில், பணிக்குச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமியின் உடலுக்கு மேயர் திருமதி ஆர்.பிரியா மாலை வைத்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வின்போது, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மண்டலக்குழுத் தலைவர் .வி.இ.மதியழகன், மாமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.